ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2479/21 - 2026 මාර්තු මස 09 වැනි සඳුදා - 2026.03.09

*2479/21 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண சபை

**1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபை பொதுச் சேவையின் அதிகாரங்கள் கையளிக்கப்படலான ஆணை**

1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவின்படி வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநரால் 2025.09.29 ஆந் திகதி 2024/01 ஆம் இலக்க வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணைக்கமைய, வடக்கு மாகாண பொதுச் சேவைகளுக்கு ஏற்புடைய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியிலிருந்து நீக்குதல், அல்லது பணிநீக்கம் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடு தொடர்பான அதிகாரங்களிடையே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ளவாறு அதிகாரங்கள் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கேற்ப இங்கு மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணையின் III ஆம் நிரலில் நியமனங்கள், இடமாற்றங்கள், பணிநீக்கம் மற்றும் ஒழுக்காற்று கட்டுப்பாடு தொடர்பான கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மற்றும் அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் பொதுச்சேவை உத்தியோகத்தர்களின் வகைகள் குறித்துக் காட்டப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள அதிகாரிகள் அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துக் காட்டப்பட்டுள்ளனர்.

அவ்வாறிருப்பினும், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட இவ் அதிகாரக் கையளிப்பு தொடர்பில் அல்லது குறிப்பிட்ட அதிகாரங்களைச் செயற்படுத்தல் தொடர்பில் ஏதேனும் வினாக்கள் தோன்றுமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாக இருத்தல் வேண்டும். வடக்கு

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மாகாண பிரதம செயலாளர் அல்லது யாரேனும் ஒரு அதிகாரிக்கு இத்தால் கையளிக்கப்படும் அதிகாரங்களைச் செயற்படுத்தும் போது அந்த அதிகாரியினால் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளும் 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2அ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும் என இவ் ஆணைக்குழு பணிக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரங்கள் வடக்கு மாகாண சபையின் பொதுச் சேவையிலுள்ள எவரேனும் அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள போதும், அந்த அதிகாரிகளால் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் செயற்படுத்தப்படும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவிற்கேற்ப வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் தயாரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச பதவிகளை நியமித்தல், இடமாற்றம்செய்தல், பதவியுயர்வு தொடர்பான வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின்படியும், மற்றும் தாபன விதிக்கோவைக்கு இணங்கியதாகவும் மற்றும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் ஏதேனும் நிபந்தனைகள், கட்டளைகள், விதிகள் மற்றும் வேறு நடைமுறை ஒழுங்குகளுக்கேற்பச் செயற்பட வேண்டுமென இவ் ஆணைக்குழு இத்தால் விசேடமாகப் பணிக்கின்றது.

மேலும் குறிப்பிட்டவாறு வழங்கப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும்போது அதிருப்தி அடையும் தரப்பினர் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டைச் செய்யும் உரிமை உடையவர்கள். மேலும் அட்டவணை 1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநரால் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்ட 2024/01 ஆம் இலக்க 2025.09.29 ஆந் திகதிய அதிகாரக் கையளிப்பின்படி கீழ்வரும் அதிகாரங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் என்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவானது நாடளாவிய சேவைகள் தவிர்ந்த வடக்கு மாகாணத்தின் சகல பொதுச் சேவை அலுவலர்களின் ஆட்சேர்ப்பு, உள்ளீர்ப்பு மற்றும் விடுவிப்பு (மாகாணத்திற்கு வெளியேயானது) ஆகியவற்றுக்கான அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்ளும்.

அத்துடன், வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களின் (மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், மாகாண காணி உதவி ஆணையாளர், மாகாண சட்ட அலுவலர்கள், மாகாண உயிரியல் மருத்துவ பொறியியலாளர்கள், விசேட தரத்திலுள்ள வெளிக்களம்/ அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர்கள், தாதியர் சேவை, மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவை, துணை மருத்துவ சேவை ஆகியவற்றின் விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள், திணைக்கள சேவையைச் சேர்ந்த விசேட தர அலுவலர்கள் (ஆரம்ப மட்டம் தவிர்ந்தது). பயிற்சி உத்தியோகத்தர் (பிரத்தியே ஆளணி), மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் அதிசிறப்புத் தரம், இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விசேட தர உத்தியோகத்தர்கள், மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2, மாகாண வரிமதிப்பீட்டாளர்கள்) நியமனம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் ஆகியவற்றுக்கான அதிகாரங்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் அலுவலரின் ஒப்பந்த அடிப்படையிலான நியமனம், மாகாண பொதுச்சேவையில் ஒப்பந்த அடிப்படையிலான மீள் நியமனம் ஆகியவை கௌரவ ஆளுநர் அவர்களின் ஒப்புதலுடன் மேற்கொள்வதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

**மேன்முறையீடு**

வடக்கு மாகாணத்தின் பொதுச்சேவையைச் சேர்ந்த ஏதேனும் அலுவலர் வடக்கு மாகாணத்தின் பொதுச் சேவையின் பிரதம செயலாளர் அல்லது ஏனைய அலுவலர்களது தீர்மானம் அல்லது கட்டளையினால் தீங்கிழைக்கப்பட்டிருப்பின், அத்தகைய தீர்மானம் அல்லது கட்டளைக்கு எதிராக கையளிக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அல்லது கட்டளையை தேவையேற்பட்டால் திருத்தலையோ அல்லது மாற்றலையோ அல்லது இல்லாமல் செய்தலையோ அல்லது சரிசெய்தலையோ மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கவனத்திலெடுக்க முடியும். இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்டு வடக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள பதவிக்கென விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மேன்முறையீடுகள் தொடர்பில் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரச சேவை ஆணைக்குழுவின் 2003.12.02 ஆந் திகதிய 04/03 இலக்க சுற்றறிக்கை கூறுகின்றது.

வடக்கு மாகாணத்தின் பொதுச்சேவையைச் சேர்ந்த ஏதேனும் அலுவலர் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தினால் தீங்கிழைக்கப்பட்டிருப்பின், அத்தகைய கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்

அத்தீர்மானத்திற்கு ஒரு மாத காலத்திற்குள் கௌரவ ஆளுநருக்கு மேன்முறையீடு செய்யலாம். கௌரவ ஆளுநர் அத்தகைய மேன்முறையீட்டை பெற்றவுடன், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 33(8) ஆம் பிரிவின் கீழ் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக கட்டளை ஒன்றை பிறப்பிப்பார்.

நாடளாவிய சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் மேன்முறையீடுகள் 1993.04.23 ஆந் திகதிய 56/ 89 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் கீழ் வரையறுக்கப்பட்ட நடைமுறையின் கீழ் அமைதல் வேண்டும்.

வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் வெளியிடப்பட்ட 2025.09.29 ஆந் திகதிய 2024/01 ஆம் இலக்க குறிப்பாணை மற்றும் 2025.12.31 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2024/01 ஆம் இலக்க குறிப்பாணையின் முதலாவது திருத்தம் ஆகிவற்றிற்கு அமைய, மேற்கூறப்பட்ட அதிகாரக் கையளிப்பு 2025.11.15 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், முந்தைய அதிகாரக் கையளிப்பின் கீழ் எடுக்கப்பட்ட, எடுக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் தீங்கு விளைவிக்காது, முந்தைய அதிகாரக் கையளிப்பு இதன் மூலம் இரத்து செய்யப்படுகின்றது என்பது பிரத்தியேகமாக அறிவுறுத்தப்படுகின்றது.

திருமதி **ரூபினி வரதலிங்கம்,**
தலைவர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
393/48, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்,
2026, பெப்புருவரி 26.

**அட்டவணை I**

| *நிரல் I*<br>*அதிகாரங்கள் கையளிப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்* | *நிரல் II*<br>*சேவை வகுதி* | *நிரல் III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| பிரதம செயலாளர் | i. இலங்கை நிர்வாக சேவை<br>ii. இலங்கை பொறியியல் சேவை<br>iii. இலங்கை திட்டமிடல் சேவை<br>iv. இலங்கை கணக்காளர் சேவை<br>v. இலங்கை கட்டடக் கலைஞர் சேவை<br>vi. இலங்கை நில அளவையாளர் சேவை<br>vii. இலங்கை கணிய அளவையாளர் சேவை | a. பதவிக்கான நியமனம்<br>b. இடமாற்றம்<br>c. ஆரம்ப புலனாய்வு மேற்கொள்ளல் |
| பிரதம செயலாளர் | i. மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் அதிசிறப்புத் தரம்<br>ii. இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விசேட தர உத்தியோகத்தர்கள் | a. பதவிக்கான நியமனம்<br>b. இடமாற்றம் |
| | i. மாகாண வரி உத்தியோகத்தர்கள்<br>ii. மொழிபெயர்ப்பாளர் சேவை<br>iii. பதவி நிலைத் தரம் அல்லாத திணைக்கள சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஆரம்ப மட்ட திணைக்கள சேவையையச் சேர்ந்த அலுவலர்கள் | a. நியமனம்<br>b. இடமாற்றம்<br>c. ஒழுக்காற்று கட்டுப்பாடு<br>d. பதவி நீக்கம் |

| *நிரல் I*<br>*அதிகாரங்கள் கையளிப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்* | *நிரல் II*<br>*சேவை வகுதி* | *நிரல் III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| பிரதம செயலாளர் | i. மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்<br>ii. மேலதிக மாகாண விவசாயப் பணிப்பாளர்<br>iii. மேலதிக மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர்<br>iv. கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் விடய வல்லுநர்கள்<br>v. பிரதி மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர்<br>vi. பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் [அனுமதிக்கப்பட்ட ஆளணி - 06 (தலைமை அலுவலகம் -01, மாவட்ட அலுவலகங்கள் - 05) ]<br>vii. கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்<br>viii. வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>ix. சுதேச மருத்துவ சேவையின் பிரதி ஆணையாளர் | a. நியமனம் |
| | i. பிரதி மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர்<br>ii. பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் [அனுமதிக்கப்பட்ட ஆளணி - 06 (தலைமை அலுவலகம் -01, மாவட்ட அலுவலகங்கள் - 05) ]<br>iii. கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்<br>iv. வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>v. மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்<br>vi. மாகாண சட்ட அலுவலர்கள்<br>vii. மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை - வகுப்பு 2<br>viii. மாகாண வரி மதிப்பீட்டாளர்கள் | a. இடமாற்றம் |
| | i. மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்<br>ii. வலயக் கல்விப் பணிப்பாளர் | a. ஒழுக்காற்று கட்டுப்பாடு |
| | கௌரவ ஆளுநரின் ஒப்புதலுடன், இலங்கை நிர்வாக சேவையின் தரம் II, தரம் I, விசேட தர உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த தரம் I உத்தியோகத்தர்களின் உள்ளீர்ப்பு மற்றும் விடுவிப்பு | a. உள்ளீர்ப்பு மற்றும் விடுவிப்பு (மாகாணத்திற்கு வெளியேயானது) |
| பிரதிப் பிரதம செயலாளர் நிர்வாகம் | i. மாகாண முகாமைத்து சேவை உத்தியோகத்தர்கள் சேவை<br>ii. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை<br>iii. இலங்கை தொழில்நுட்பவியல் சேவை<br>iv. மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை - வகுப்பு 3<br>v. கணனித் தரவுப் பதியுநர் (பிரத்தியேக ஆளணி)<br>vi. மாகாண சாரதிகள் சேவை<br>vii. மாகாண அலுவலகப் பணியாளர் சேவை | a. நியமனம்<br>b. இடமாற்றம்<br>c. ஒழுக்காற்று கட்டுப்பாடு<br>d. பதவி நீக்கம் |
| | அமைய மற்றும் தற்காலிக அடிப்படையிலான நியமனங்களுக்கு கௌரவ ஆளுநர் அவர்களிடமிருந்து முன்னனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும் | a. அமைய மற்றும் தற்காலிக அடிப்படையிலான நியமனங்கள் |

| *நிரல் I*<br>*அதிகாரங்கள் கையளிப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்* | *நிரல் II*<br>*சேவை வகுதி* | *நிரல் III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| | i. இலங்கை விஞ்ஞான சேவை<br>ii. இலங்கை விவசாய சேவை<br>iii. இலங்கை கால்நடை அபிவிருத்தி மற்றும் சுகாதார சேவை<br>iv. இலங்கை கல்வி நிர்வாக சேவை<br>v. இலங்கை ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் சேவை<br>vi. இலங்கை மருத்துவ உத்தியோகத்தர் சேவை (நிபுணத்துவம் மற்றும் நிபுணத்துவம் அல்லாத) | a. பதவிக்கான நியமனம்<br>b. இடமாற்றம்<br>c. ஆரம்பப் புலனாய்வு மேற்கொள்ளல் |
| | i. விசேட தரம் தவிர்ந்த திணைக்கள வகுதியைச் சேர்ந்த வேறு ஏதேனும் மூன்றாம் நிலை மட்ட உத்தியோகத்தர்கள்<br>ii. தாதியர் சேவை, மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவை, துணை மருத்துவ சேவை ஆகியவற்றின் விசேட தரம் அல்லாத உத்தியோகத்தர்கள்<br>iii. பதவிநிலைத் தரம் அல்லாத திணைக்கள சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஆரம்ப மட்ட திணைக்கள சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் | a. நியமனம்<br>b. இடமாற்றம்<br>c. ஒழுக்காற்று கட்டுப்பாடு<br>d. பதவி நீக்கம் |
| மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் | i. இலங்கை ஆசிரியர் சேவை | a. நியமனம்<br>b. ஒழுக்காற்று கட்டுப்பாடு<br>c. பதவி நீக்கம் |
| | திணைக்கள சேவையைச் சேர்ந்த ஆரம்ப மட்ட அலுவலர்களின் நியமனம் (அத்தகைய நியமனங்களுக்கு கௌரவ ஆளுநர் அவர்களிடமிருந்து முன்னனுமதி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.) | அமைய மற்றும் தற்காலிக அடிப்படையிலான நியமனங்கள் |
| | i. மாகாண உயிரியல் மருத்துவ பொறியியலாளர்<br>ii. விசேட தரத்திலுள்ள வெளிக்களம்/ அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர்கள்<br>iii. தாதியர் சேவை, மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவை, துணை மருத்துவ சேவை ஆகியவற்றின் விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள்<br>iv. திணைக்கள சேவையைச் சேர்ந்த விசேட தர அலுவலர்கள் (ஆரம்ப மட்டம் தவிர்ந்தது) | a. இடமாற்றம் |
| | i. இலங்கை அதிபர் சேவை | a. பதவிக்கான நியமனம்<br>b. இடமாற்றம்<br>c. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>d. பதவி நீக்கம் |
| மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் | i. இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை | a. பதவிக்கான நியமனம்<br>b. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>c. பதவி நீக்கம் |
| | மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் தவிர்ந்த, இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்டு வடக்கு மாகாண அரச சேவையிலுள்ள பதவிக்கென நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரம் வடக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது | a. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |

| *நிரல் I*<br>*அதிகாரங்கள் கையளிப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்* | *நிரல் II*<br>*சேவை வகுதி* | *நிரல் III*<br>*கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
|---|---|---|
| மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் | விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த உதவி/ பிரதிப் பணிப்பாளர் [அனுமதிக்கப்பட்ட ஆளணி - 14 (தலைமை அலுவலகம் - 3, யாழ்ப்பாணம் - 3, மன்னார் - 2, வவுனியா - 2, முல்லைத்தீவு -2, கிளிநொச்சி - 2)] | a. நியமனம் |
| மாகாண திணைக்களத் தலைவர்கள் | i. இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை<br>ii. இலங்கை ஆசிரியர் சேவை<br>iii. அவர்களின் நேரடி நிர்வாக கட்டுப்பாட்டின் கீழுள்ள பதவிநிலைத் தரம் அல்லாத திணைக்களச் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்கள சேவையைச் சேர்ந்த ஆரம்ப மட்ட ஊழியர்கள் | a. இடமாற்றம் |
| மாகாண திணைக்களத் தலைவர்கள் | i. ஏதேனும் உத்தியோகத்தர் அல்லது ஊழியர்களை பணிநீக்கம் செய்தல் (நியமன/ ஒழுக்காற்று அதிகாரிக்கு தகவலுடன் தாபன விதிக்கோவை அத்தியாயம் XLVIII பிரிவு 31 இன் பிரகாரம் திணைக்களத்தில் பணியாற்றும் மற்றும் தாபன விதிக்கோவை அத்தியாயம் XLVIII பிரிவு 25.5 இன் பிரகாரம் சிறு தண்டனைகள் விதிப்பதற்கும்) | a. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு (பணி நீக்கம்) |
| மாநகர சபை ஆணையாளர்கள், நகர சபை மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் | அந்தந்த உள்ளூராட்சி அதிகார சபையில் உள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை ஊழியர்கள் (உள்ளூராட்சி ஆணையாளருக்குத் தகவலுடன்) அவர்களின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஆரம்ப மட்ட ஊழியர்களை இடமாற்றும் அதிகாரம் (மாகாண இணைந்த சேவை தவிர்ந்த) | a. நியமனம்<br>b. இடமாற்றம்<br>c. ஒழுக்காற்று கட்டுப்பாடு<br>d. பதவி நீக்கம் |
| நிறுவனத் தலைவர்கள் (பிராந்தியம்/ மாவட்டம்/ வலய மட்டம்) | **இலங்கை ஆசியர் சேவை** - அந்தந்த வலயத்திற்குள் உள்ள பாடசாலைகளுக்கு மட்டும் இடமாற்றும் அதிகாரம் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளரால் செயற்படுத்தப்படும். | a. இடமாற்றம் |

EOG 03 - 0098